**செ. கு. எண்:149** **நாள்: 10.10.2017**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி**

அவர்களின் அறிக்கை – **10.10.2017**

**மேட்டூர் அணையிலிருந்து**, புள்ளம்பாடி மற்றும் புதிய கட்டளை மேட்டுக் கால்வாய்கள் மூலம் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடும்படி, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் அரியலூர் மாவட்ட வேளாண் பெருமக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, மேட்டூர் அணையிலிருந்து, புள்ளம்பாடி மற்றும் புதிய கட்டளை மேட்டுக் கால்வாய்களில் நடப்பாண்டு பாசனத்திற்காக **11.10.2017** முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் உள்ள **42,736 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**